இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில், நேற்று (08.08.2023), சென்னை, சாலிகிராமத்தில் திருவாளர்கள் ஜெயின் வெஸ்ட் பில்டர்ஸ் நிறுவனத்தால் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் தற்போது ஏற்பட்டுள்ள கட்டிடத்தின் பாதுகாப்பு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. உடன் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி. அபூர்வா, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல இணை ஆணையர் அப்துல் ரஹ்மான் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஜெயின் வெஸ்ட் பில்டர்ஸ் நிறுவனத்தால் சாலிகிராமத்தில் கட்டப்பட்ட

கட்டிடத்தின் பாதுகாப்பு குறித்த ஆய்வுக்கூட்டம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஆக.9-

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில், நேற்று (08.08.2023), திருவாளர்கள் ஜெயின் வெஸ்ட் பில்டர்ஸ் நிறுவனத்தால், கதவு எண். 24, அருணாச்சலம் சாலை, சாலிகிராமம் , சென்னை - 600 093 முகவரியில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் தற்போது ஏற்பட்டுள்ள கட்டிடத்தின் பாதுகாப்பு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வளாக கட்டிடம் 5 தொகுப்புகளுடன் கூடிய அடுக்குமாடி கட்டிடம் கட்டுவதற்கு 17.05.2011 அன்று சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் திட்ட அனுமதி வழங்கியுள்ளது. மேலும், இக்கட்டிடத்திற்கு 20.10.2015 அன்று பணிநிறைவுச் சான்றிதழும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் வழங்கியுள்ளது.

தற்போது இவ்வளாகத்தில் குடியிருப்புகளை வாங்கியுள்ள குடியிருப்பு உரிமைதாரர்கள் மேற்படி இக்கட்டிடத்தினை திருவாளர்கள் ஜெயின் வெஸ்ட் பில்டர்ஸ் நிறுவனம் சரியாகக்கட்டி தங்களுக்கு ஒப்படைக்கவில்லை என்ற கோரிக்கையின் பேரில் ஊடகத்தில் வெளிவந்த தகவல்களின் அடிப்படையில், இந்த ஆய்வு செய்யப்பட்டது.

இக்கட்டிடத்தின் சம்பந்தமான வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். WP No. 12880 of 2022 நடைபெற்று வருகிறது. இவ்வழக்கில் நீதிமன்றம் இக்கட்டிடத்தின் கட்டுமான நிறுவனரை சென்னை ஐ.ஐ.டி.யில் ரூபாய் இரண்டு கோடி செலுத்தி ஆய்வறிக்கையினை பெறுமாறு உத்தரவிட்டது. இதனை எதிர்த்து கட்டுமான நிறுவனர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அவ்வழக்கு கடந்த 13.02.2023 அன்று இவ்வழக்கினை உயர்நீதிமன்றத்திலேயே தீர்த்துக்கொள்ளுமாறு ஆணை பிறப்பித்தது. ஆனால் கட்டிட மேம்பாட்டாளர் M/s. Jain Housing இதுநாள் வரை இது தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இவ்வளாகத்தின் குடியிருப்பில் வசிப்பவர்கள் மற்றும் பொதுமக்களின் நலனைக் கருதி அமைச்சர் அவர்கள் M/s. CUBE நிறுவனம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்களிடம் முழுவதுமாக தொழில்நுட்ப ஆய்வு செய்து இக்கட்டிடத்தின் தற்போதைய நிலைக்கான காரணம் மற்றும் கட்டிடத்தின் உறுதித்தன்மையின் தொழில்நுட்ப ஆய்வறிக்கையினை விரைவில் பெற்று மக்களின் நலனைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தியுள்ளார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி. அபூர்வா, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல இணை ஆணையர் அப்துல் ரஹ்மான் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இடிப்பது வீடுகளையல்ல; மதச்சார்பற்ற நாட்டை!

இதைத் தடுப்பது தேச பக்தர்களின் உடனடி கடமை!

‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் - பா.ஜ.க. அரசுகளுக்கு கண்டனம்!

சென்னை, ஆக. 9 -

மணிப்பூரை தொடர்ந்து பா.ஜ.க. ஆளும் ஹரியானாவில் வன்செயல்கள் தொடர்ந்து வருகிறது. அதிகாரத்தை கையில் வைத்துள்ள மமதையில் பா.ஜ.க. மாநில அரசுகள் இடித்துக் கொண்டிருப்பது வீடுகளையல்ல; மதச்சார்பற்ற நாட்டை இடித்துக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுப்பது தேச பக்தர்களின் உடனடி கடமையென ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கம் தீட்டியுள்ளது.

அது வருமாறு:

மணிப்பூரை தொடர்ந்து பா.ஜ.க. ஆளும் ஹரியானா மாநிலத்தில் வன்செயல்கள் தொடர்ந்து வருகின்றன. வன்முறை வெறியாட்டத்தால் ஆறுபேர் உயிரிழந்துள்ளனர். ஹரியா னாவை ஆளும் பா.ஜ.க. அரசு கலவரத்திற்கு காரணமான விஎச்பி குண்டர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக அப் பாவி முஸ்லிம் மக்களின் கடைகள், ஹோட்டல் களை தேடித் தேடி இடித்து வருகிறது.

உ.பி., மாநிலத்தில் சிறுபான்மை மக்களுக்குச் சொந்தமான வீடுகள், கடைகளை புல்டோசர்கள் மூலம் இடித்துத் தள்ளு வதை வாடிக்கையாக கொண்டுள்ளது பா.ஜ.க. அரசு.

தீக்கதிர்

2023 ஆகஸ்ட் 08 செவ்வாய்க்கிழமை

வீட்டை அல்ல, நாட்டை இடிக்கிறார்கள்

மணிப்பூரை தொடர்ந்து பாஜக ஆளும் ஹரியானா மாநிலத்தில் வன்செயல்கள் தொடர்ந்து வருகின்றன. வன்முறை வெறியாட்டத்தால் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர். ஹரியானாவை ஆளும் பாஜக அரசு கலவரத்திற்கு காரணமான விஎச்பி குண்டர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக அப்பாவி முஸ்லிம் மக்களின் கடைகள், ஹோட்டல்களை தேடித் தேடி இடித்து வருகிறது.

உபி, மாநிலத்தில் சிறுபான்மை மக்களுக்குச்

புதுதில்லியிலும் நீதிமன்ற உத்தரவை மீறி ஏழை, எளிய இஸ்லாமிய மக்களின் குடிசைகளை இடித்துத் தள்ள முயன்றபோது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் பிருந்தா காரத் புல்டோசர் முன்பு நெஞ்சுரத்துடன் நின்று இதயமற்ற அந்த அரசு எந்திரத்தை பின்வாங்கச் செய்தார்.

மணிப்பூரில் நீடிக்கும் வன்செயல்களைத் தடுக்க ஒன்றிய அரசோ, மாநில பா.ஜ.க. அரசோ எந்தவித நடவடிக்கையும் எடுக்க வில்லை. இது குறித்து நாடாளுமன்றத்தில் வந்து விளக்க மளிக்கக் கூட பிரதமர் மோடி தயாராக யில்லை. அந்த மாநிலத்தில் புதிய பகுதிகளுக்கு கலவரம் பரவுகிறது.

இந்த நிலையில் ஹரியானா மாநிலத்திலும் இந்துத்துவா பயங்கர வாதிகள் கலவரத்தை ஏற்படுத்தியுள்ளனர். பசு பாதுகாப்பு என்ற பெயரில் இரண்டு முஸ்லிம்களை கொலைசெய்த மோனு மனோசர் விஎச்பி ஊர்வலத்தில் பங்கேற்க இருப்பதாக வெளியான தகவல்தான் கலவரத் திற்கு காரணம். அதே போல மற்றொரு பயங்கர வாதியான பிட்டு பஜ்ரங்கி என்பவர் வெளியிட்ட காணொலியும் பதற்றத்தை அதிகரித்தது.

ஆயுதங்களுடன் வன்முறையில் ஈடுபட்ட வி.எச்.பி. உள்ளிட்ட இந்துத்துவா தீவிர வாதிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. ஆனால் முஸ் லிம்களுக்குச் சொந்தமான ஹோட்டல்கள், வீடுகள், மாநில அரசினால் இடித்து தரை மட்டமாக்கப்படுகின்றன. ஏற்கெனவே அச்சமடைந்துள்ள சிறு பான்மை மக்களை மேலும் அச்சுறுத்துவதாகவே மாநில அரசின் நடவ டிக்கை உள்ளது. ஒன்றிய அரசும் ‘நடப்பதெல்லாம் நன்மைக்கே’ என்பது போல வேடிக்கை பார்க்கிறது.

இடிக்கப்படும் கட்டி டங்கள் சட்டவிரோதமாக கட்டப்பட்டவை என மாநில அரசு கூறுகிறது. முஸ்லிம் மக்களின் கட்டி டம் மட்டும்தான் சட்டவிரோதமாகக் கட்டப் பட்டுள்ளதா? பா.ஜ.க.வை சேர்ந்த ஒருவரது கட்டிடம் கூட இடிக்கப்படவில் லையே ஏன்? அதிகாரத்தை கையில் வைத்துள்ள மமதையில் பா.ஜ.க. மாநில அரசுகள் இடித்துக் கொண்டிருப்பது வீடு களை அல்ல, மதச்சார்பற்ற இந்த நாட்டை இடித்துக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுப்பது தேச பக்தர்களின் உடனடிக் கடமையாகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் ஒன்றிய செயலாளர் கி.வே ஆனந்தகுமார் ஏற்பாட்டில் கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் கும்மிடிப்பூண்டி கி.வேணு கலைஞர் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார் அருகில் பொதுக்குழு உறுப்பினர் பா.செ.குணசேகரன், தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் மூர்த்தி, திருமலை சுரேஷ், கொல்லானூர் வெங்கடேசன், புலியூர் புருஷோத்தமன், பிரபு, கவுன்சிலர்கள் ஜோதி, அரிபாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொழிலாளர் விரோத, மக்கள் விரோத ஜனநாயக விரோத

ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து இன்று பெருந்திரள் அமர்வு!

தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. அறிக்கை!

சென்னை, ஆக.9-

தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இந்திய ஒன்றியத்தின் ஆட்சிப் பொறுப்பை பா.ஜ.க. ஏற்று சுமார் 9 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இந்த 9 ஆண்டுகளில் நடைபெற்ற மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, ஜனநாயக விரோத நடவடிக்கைகளை கண்டித்து மத்திய தொழிற்சங்க அமைப்புகள் 14 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து தேசிய அளவில் செயல்படும் மத்திய தொழிற்சங்கங்கள், சுயேச்சையான தொழில் சார்ந்த தேசிய அளவிலான அமைப்புகள் ஒருங்கிணைந்து போராடி வருகின்றன. தொழிற் சங்கங்களின் கோரிக்கைகளை கேட்கவோ, அறிந்து கொள்ளவோ, விவாதித்து தீர்வு காணவோ ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு நேரமில்லை. காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் ஆர்.எஸ்.எஸ்.சின் தொழிற்சங்க அமைப்பான பி.எம்.எஸ். சகட்டு மேனிக்கு கண்மூடித்தனமான விமர்சனங்களை அன்றைய ஆட்சி மீது முன்வைத்தது.

மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு 4 மத்திய அமைச்சர்கள் கொண்ட குழுவை அமைத்து தொழிற்சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தியது. தற்போதுள்ள பா.ஜ.க. அரசு நமது கோரிக்கைகளை தீர்க்க எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை.

பா.ஜ.க. ஆட்சியில் முன்பு இருந்த நிலையை விட மிக மோசமாக மத்திய பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பது, பொதுத்துறை நிறுவனங்களை விற்பது என்ற முறையில் செயல்பட்டு 2015-2016 முதல் 2023-2024 வரை காலத்தில் பொதுத் துறை பங்குகளை ரூபாய் 6,50,000/ கோடிக்கு விற்பனை செய்ய இலக்கு நிர்ணயித்து ரூ.3,65,219 கோடி மதிப்பிலான பங்குகளை விற்றுள்ளது.

பங்கு விற்பனை செய்வதற்கு என ஒரு தனி அமைச்சரை நியமித்தது பா.ஜ.க. அரசு. மேலும் தேசிய பணமாக்கல் திட்டத்தின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டு துவங்கி 2025 ஆம் ஆண்டு வரையில் 6,00,000 கோடி திரட்டு வதற்கு 400 ரயில் நிலையங்கள், 90 பயணிகள் ரயில் 741 கிலோ மீட்டர் நீள ரயில் பாதை, 15 ரயில்வே விளையாட்டு மைதானங் கள், 2.86 லட்சம் கிலோ மீட்டர் பாரத் நெட் பைபர், 14917 தொலைத் தொடர்பு கோபுரங்கள், நிலக்கரிச் சுரங்கம் மற்றும் சேமிப்பு கிடங்குகளை, 8154 கிலோ மீட்டர் நீள இயற்கை எரிவாயு குழாய் பாதை, 3930 கிலோ மீட்டர் நீள எண்ணெய் சுத்திகரிப்பு குழாய் பாதை, விமான நிலையங்கள், துறைமுகங்கள், தேசிய விளையாட்டு அரங்கங்களை குத்தகைக்கு விட

ஏற்பாடு செய்துள்ளது.

2014 ஆம் ஆண்டு தேர்தல் வாக்குறுதியில் ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வழங்குவோம் என வாக்குறுதி அளித்து ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பா.ஜ.க. ஒன்பது ஆண்டு கால ஆட்சியில் 18 கோடி பேருக்கு வேலை வழங்கியிருக்க வேண்டும். ஆனால் ஒன்றிய அரசு அலுவலகங்கள், மத்திய பொதுத்துறை நிறுவனங்களிலுள்ள காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளது. லட்சக்கணக்கான பணியிடங்கள் ஒழிக்கப்பட்டு விட்டன. ஒன்றிய பா.ஜ.க. அரசின் பண மதிப்பிழப்பு நீக்கம் மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பின் காரணமாக 34 சதவிகித சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் முழுமையாகவோ, அல்லது தற்காலிகமாகவோ மூடப்பட்டது. மூடப்பட்ட நிறுவனங் களில் பணியாற்றிய 5 கோடி பேர் வேலையிலிருந்து தூக்கியெறியப்பட்டுள்ளனர். தொலைத் தொடர்பு துறை நிறுவனங்களில் (பி.எஸ்.என்.எல்.) விருப்ப ஓய்வு திட்டத்தை அறிவித்து 80 ஆயிரம் தொழிலாளர்களை வேலையிலிருந்து ஒன்றிய பா.ஜ.க. அரசு வெளியேற்றியுள்ளது. அரசின் பொதுத் துறை நிறுவனமான பி.எஸ்.என்.எல். நிறுவனத்திற்கு 4ஜி, 5 ஜி அலைக்கற்றை சேவையை அனுமதிக்கவில்லை. தனியார் நிறுவனங்களுக்கு அந்த சேவையை வழங்கியுள்ளது. இந்திய பொருளாதார கண்காணிப்பு அமைப்பு தந்துள்ள தகவல் அடிப்படையில் 2023 ஏப்ரல் மாத நிலவரப்படி இந்தியாவில் வேலையற்றோர் எண்ணிக்கை 7.8 ஆக உள்ளது. இது சுதந்திர இந்தியாவின் 75 ஆண்டு கால வரலாற்றில் இல்லாத உச்சம் ஆகும். தற்போது நிரந்தர பணியில் உள்ளோர் எண்ணிக்கை என்பது தொடர்ந்து சரிந்து வருகிறத. நிரந்தரப் பணியிடங்களில் காண்டிராக்ட், அவுர்சோர்சிங் முறை புகுத்தப்பட்டுள்ளது.

இந்திய நாட்டில் 100 மாவட்டங்களில் 120 நகரங்கள் மற்றும் 800 கிராமங்களில் வசித்து வரும் 12,42,000 குடும்பங்களின் தகவலை சேகரித்து இந்திய மக்களை ஏழைகள், கீழ்த்தட்டு நடுத்தர வர்க்கம், நடுத்தர வர்க்கம், உயர் நடுத்தர வர்க்கம் மற்றும் பணக்காரர்கள் என 5 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட தில் 60 சதவிகிதமான மக்கள் ஏற்கனவே பெற்று வந்த வருமானத்தை விட குறைவான வருமானம் பெறுகிறார் எனவும், 20 சதவிகித பணக்காரர்களின் வருமானம் 39 சதவிகிதம் உயர்ந்துள்ளது என தெரிய வந்துள்ளது. பா.ஜ.க.வின் 9 ஆண்டு கால ஆட்சியில் 23 கோடி இந்தியர்கள் ஏழ்மையில் உள்ளார்கள் என்பதும் தெரிய வந்துள்ளது. உலக அளவில் 121 நாடுகள் வரிசைபடுத்தப்பட்ட அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பட்டினி குறியீட்டில் இந்தியா 107வது இடத்தில் உள்ளது. ஆசிய நாடுகளான பாகிஸ்தான், இலங்கை, நேபாளம் மற்றும் வங்க தேசத்தை விட இந்தியாவில் பட்டினியால் வாடுவோர் எண்ணிக்கை கூடுதலாக உள்ளது வேதனைக்குரிய செய்தியாகும்.

இந்தியத் தொழிலாளி வர்க்கம் இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பாகவே போராடி பெற்றதும் மற்றும் சுதந்திர இந்தியாவில் போராடி உருவாக்கப்பட்ட 44 தொழிலாளர் நல சட்டங்களில் 29 சட்டங்களை ஒன்றாக இணைத்து 4 தொகுப்பு சட்டங்களாக மாற்றியுள்ளது. 15 சட்டங்கள் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு விட்டது. இந்த சட்டங்கள் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தீர்மானங்கள், பரிந்துரைகளை புறக்கணித்து சட்டத் தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இச்சட்டத் தொகுப்புகள் சம்மந்தமாக இந்திய தொழிலாளர் மாநாட்டில் விவாதிக்கப்படவில்லை. தொழிற்சங்கங்களிடமும் முறையாக கருத்து கேட்கப்படவில்லை. சட்ட வரைவு நகலுக்கு அளிக்கப்பட்ட ஆட்சேபணைகள், பரிந்துரைகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. நாடாளுமன்றத்தில் விவாதம் இன்றி சில நொடிகளில் நிறைவேற்றப் பட்டு விட்டது.

இச்சட்டங்கள் மூலம் இந்தியாவில் மொத்த முள்ள தொழிற்சாலைகளில் 89 சதவிகிதம் தொழிற்சாலைகள் இச்சட்ட வரம்பிற்குள் வராது. தொழிலாளர்களை வேலையிலிருந்து வெளியேற்றவும், தொழில்களை மூடவும் எந்த அனுமதியும் பெற வேண்டிய தில்லை என்ற நிலை உருவாகியுள்ளது. ஏற்கனவே நடைமுறையிலிருந்த 29 சட்டங்களில் சுமார் 1200 பிரிவுகள் கொண்டதாக இருந்தது. இப்போது உருவாக்கப்பட்ட 4 சட்டத் தொகுப்புகளில் சுமார் 479 பிரிவுகள் மட்டுமே கொண்டதாக உள்ளது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் இணைப்பு என்ற பெயரால் சீர்குலைப்பது, காப்பீட்டுத் துறையில் அந்நிய நிறுவனங்களை அனுமதிப்பது, எல்.ஐ.சி. பங்குகளை விற்பது, ரயில்வே துறையை தனியார் மயமாக்குவது, இந்திய நாட்டிற்கு சொந்தமாக இருந்த ஏர் இந்தியா நிறுவனத்தை டாடாவிற்கு விற்பனை செய்தது, விவசாயி உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை வழங்க மறுப்பது என அனைத்து துறைகளையும் சீர்குலைத்து வருகிறது பா.ஜ.க. அரசு.

விலைவாசி கட்டுக்கடங்காமல் உயர்ந்து வருகிறது. ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் உணவு மானியம், உர மானியம் குறைக்கப்பட்டுள்ளது. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்துள்ள போதிலும் கலால் வரியை உயர்த்தி பெட்ரோல், டீசல் விலை உயர்வை மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. சமையல் எரிவாயு விலை ரூபாய் 1200 ஆக உயர்ந்த வண்ணம் உள்ளது. வங்கிக் கணக்கில் மானியம் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது.

ஒன்றிய பா.ஜ.க. அரசின் பிற்போக்குத் தன்மையால் இந்திய நாட்டின் ஒரு பகுதியான மணிப்பூர் மாநிலம் அமைதியற்ற நிலையில் உயிர் பலி, உடமைகள் சேதம், பொது சொத்துக்கள் சூறையாடப்பட்டது என பதட்டம் நீடித்து வருகிறது. ஒன்றியத்திலும், மணிப்பூர் மாநிலத்திலும் பா.ஜ.க. அரசு தான் உள்ளது. ஆனால் மக்கள் நாதியற்றவர்களாக உள்ளனர். ஒட்டுமொத்தமாக தொழிலாளர் வர்க்கத்தை, விவசாயிகளை, வர்த்தகர்களை வஞ்சிப்பதோடு, ஜனநாயகத்தை கேள்விக்குறியதாக மாற்றியுள்ளது பா.ஜ.க. அரசு.

இந்திய நாடு சுதந்திரம் அடைந்த 1947 முதல் 31.03.2014 வரை 67 ஆண்டுகளில் பெற்ற கடன் 55,87,000 இலட்சம் கோடி. மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின் இந்த 9 ஆண்டுகளில் கூடுதலாகப் பெற்ற கடன் 100 லட்சம் கோடி. இன்றைய நிலையில் இந்திய நாட்டின் ஒட்டுமொத்த கடன் 155.31 லட்சம் கோடியாக உள்ளது. ஆனால் புதிய பெருந்திட்டங்கள் எதுவும் தொடங்கப்படவில்லை. 140 கோடி மக்கள் நலன் பெறும் எந்த நலத் திட்டங்களும் நிறைவேற்றவில்லை.

பங்கு விற்பனை, அரசு சொத்து குத்தகை , பெட்ரோல் டீசல் கலால் வரி உயர்வு, ஜி.எஸ்.டி. என பல இனங்களில் வருவாய் கூடியிருக்கிறது என தம்பட்டம் அடித்து இந்திய மக்களை கடன்காரனாக்கியதுதான் ஆர்.எஸ்.எஸ். மோடி செய்த சாதனை.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஒவ்வொரு இந்தியன் மீதும் கடன் சுமை ரூ.43,124/ என்பதை பா.ஜ.க. மோடி ஆட்சிக்கு வந்த பின் ஒவ்வொரு இந்தியன் மீது கடன் ரூ.109373/ ஆக உயர்த்தி உள்ளது. மோடி ஆட்சிக்கு வந்த பின் ஒவ்வொரு இந்தியனும் ரூ.66249/ கூடுதலாக கடனாளியாக ஆக்கி உள்ளார்.

ஒரே நாடு, ஒரே மதம், ஒரே சட்டம், ஒரே மொழி, ஒரே ரேஷன் கார்டு என வெற்று முழக்கங்களை வைத்து இந்திய நாட்டை சீர்குலைத்து வருகிறது. தேசத்தைப் பாதுகாக்க, ஜனநாயகத்தைப் பாதுகாக்க, மக்களைப் பாதுகாக்க மத்திய தொழிற்சங்க அமைப்புகள் மற்றும் தொழில்வாரியாக உள்ள தொழிற் சங்க அமைப்புகள் ஜனவரி 30 அன்று தலைநகர் தில்லியில் கூடி எடுத்த முடிவின் அடிப்படையில் இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றின் முக்கிய நாளான “வெள்ளையனே வெளியேறு” இயக்க நாளான ஆகஸ்ட் 9 ஆம் தேதி இன்று நமது மாநிலத் தலைநகர் சென்னை எழும்பூரில் உள்ள ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகில் நடைபெறவுள்ள பெருந்திரள் அமர்வில் அணி திரள்வோம்! ஜனநாயக விரோத பிற்போக்குத்தனமாக ஆட்சி நடத்தும் பாஜக அரசிற்கு பாடம் புகட்டுவோம்! என அனைத்து தொழிற் சங்கத்தின் சார்பாக அழைக்கிறோம். வாரீர்! வாரீர்!!

இவ்வாறு அந்த அறிக்கையில் தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் கூறியுள்ளார்.

காஞ்சி மணிமொழியார் தமிழ்ப் பேரவை சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் ஐந்தாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு!

சென்னை, ஆக.9-

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு காஞ்சி மணிமொழியார் தமிழ்ப் பேரவையின் சார்பில் கோடம்பாக்கம், என். எஸ். கிருஷ்ணன் சாலையில் அமைந்துள்ள காஞ்சி மணிமொழியார் வளாகத்திலுள்ள குறளகத்தில் தன்னிகமில்லாத ஒப்பற்றத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப்படம் வைத்து மாலை அணிவித்து மலர் தூவி புகழ் வணக்கம் செய்த நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு தலைவர் கலைஞரின் மக்களுக்கு செய்த நலன்களையும், தொண்டுகளையும் செயல் திட்டங்களையும் மக்களிடம் சேர்த்து அவரை புகழ்ந்து, பாராட்டி, வாழ்த்தி வணங்கி, மரியாதை செய்யப்பட்டது.

இதேபோல் பேரறிஞர் அண்ணா பிறந்த ஊரும், பெரியவர் மணிமொழியார் பிறந்த ஊரும் காஞ்சிபுரம் மாமல்லன் நகர், டி.கே.ஸ் மணி தெருவில் உள்ள போர்வாள் இதழ் ஆசிரியரும் பேரசிரியர் மா.இளஞ்செழியன் இல்லத்தில் கலைஞர் திருவுரு வப்படம் வைத்து மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது.

நிகழ்ச்சி ஏற்பாடு காஞ்சி மணிமொழியார் தமிழ் பேரவையின் சார்பில் நடைபெற்றது. கலந்து கொண்டவர்களுக்கு நூல்கள், குடிநீர், தேணீர், உணவுகள் கொடுத்து உபசரிக்கப்பட்டது.

இதில் வட்ட செயலாளர் ந.மோ. முரளி, மு.சத்தியா, (இலக்கிய அணி) சா.தேவராசு பாண்டியன், ராமசந்திரன், சந்துரு, பாஸ்கர், அப்பு, காங்கிரஸ் ராஜசேகர், ரமேஷ், ஆட்டோ ரவி, டைலர்ராஜ், சந்திரசேகர் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டார்கள்.

ஏற்பாடு (காஞ்சி மணிமொழியார் தமிழ்ப்பேரவை) புரவலர் ந.இளவரசு, செம்மொழி சா.மணிவண்ணன். மேலும், தினசரி கலைஞர் அவர்களின் புகழ் பாடி நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது என்று நிர்வாகி தெரிவித்தனர். அதேபோல் முன்பு வழக்கம் போல திராவிட இயக்க தொடர்பான புகைபடங்கள், புத்தகங்கள், செய்திதாள்கள். மேலும் அதை அதிக படுத்தி காட்சிபடுத்தவும் செயல்படுத்தபட்டு வருகிறது. இதை ஏற்கனவே கட்சி தலைவர்களும், கழக தோழர்களும், பொது மக்களும் கண்டு பல அறிய விவரங்களை அறிந்து மகிழ்ந்து பாராட்டியுள்ளனர். ஏற்கனவே, திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன், எம்.பி. (அவருடைய முகநூலிலும் மணி மொழியாரின் பேரவையின் செயல்களை புகைப்படத்துடன் பாராட்டி பதிவிட்டுள்ளார்) வி.பி. கலைராஜன் (இலக்கிய அணி தலைவர்), பேராசிரியர் மகாலிங்கம் (வேல்ஸ்) மாறன், கவிகொண்டல் செங்கூட்டுவன், பெருங்கவிகோ வா.மு. சேதுராமன், மாம்பலம்சந்திரசேகர் ஆகியோர் பாராட்டினார்கள்.

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட 17 வது வார்டு கிருஷ்ணா நகர் ஜெயலட்சுமி நகர் 18 வது வார்டு செல்லியம்மன் கோவில் தெரு 20வது வார்டு அம்பாள் நகர் 26 வது வார்டு தெற்கு தெரு ஆகிய பகுதிகளில் ரூபாய் 39 லட்சம் மதிப்பீட்டில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 4 இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்களை(R.O பிளான்ட்) அமைத்துத் தந்து மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை தலைமையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். அப்பொழுது பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ. எஸ். பெர்னார்ட், மாமன்ற உறுப்பினர்கள் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழகச் செயலாளர்கள் வட்ட கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.